# <u>சாதாரணக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2020 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## <u>பொருள் : 01</u>

**வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிக பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் 221 நாள் 18.10.2019 அன்று அனுமதி அளிக்கப்பட்டு, 31.03.2020 வரை பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**ஆனால், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக தமிழக அரசு 24.03.2020 முதல் 144 தடை உத்தரவு உள்ளதால், மேற்கண்ட குடிநீர் பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்கண்ட பணியானது குடிநீர் அத்தியாவசியப் பணி என்பதால், தொடந்து பணி புரிய வேண்டும்.**

**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 26458/2016/பி1 நாள் 30.03.2020ன் படி, வெளிக்கொணர்வு (Outsourcing) பணிக்கு நீட்டிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கி உள்ளதை தொடர்ந்து, குடிநீர் பணியாளர்களுக்கு 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கும், அதற்குண்டான தொகை ரூ.7.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **குடிநீர் பணி என்பதால், மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

## <u>பொருள் : 02</u>

**வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் 9 மேல்நிலைத் தொட்டிகளை பராமரிக்கவும், அம்மேல்நிலைத் தொட்டி வாயிலாக விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும் செலீஸ் வால்வுகளை இயக்கி குடிநீரினை சீராக விநியோகம் செய்யவும் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிக பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண் 221 நாள் 18.10.2019 அன்று அனுமதி அளிக்கப்பட்டு, 31.03.2020 வரை பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**ஆனால், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக தமிழக அரசு 24.03.2020 முதல் 144 தடை உத்தரவு உள்ளதால், மேற்கண்ட குடிநீர் பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது. மேற்கண்ட பணியானது குடிநீர் அத்தியாவசியப் பணி என்பதால், தொடந்து பணி புரிய வேண்டும்.**

**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 26458/2016/பி1 நாள் 30.03.2020ன் படி, வெளிக்கொணர்வு (Outsourcing) பணிக்கு நீட்டிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கி உள்ளதை தொடர்ந்து, குடிநீர் பணியாளர்களுக்கு**

**01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கும், அதற்குண்டான தொகை ரூ.7.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**குடிநீர் பணி என்பதால், மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்**

## <u>பொருள் : 03</u>

பல்லடம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிகவளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேருந்து நிலையம், உழவர் சந்தை, தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், பள்ளிகள், வழிபாட்டு தளங்கள், அம்மா உணவகம், மயானப்பகுதி , பேருந்து நிறுத்தும் இடங்கள், வங்கி ஏ.டி.எம்கள், வெளிநாடுகள், வெளிமாநிலங்கள் மற்றும் டெல்லியில் நடைபெற்ற தப்ளிக் மாநாட்டிற்கு சென்றுவந்தவர்களின் குடியிருப்புகள், நகராட்சியில் தூய்மைபணிக்கு பயன்படுத்தும் வாகனங்கள், அலுவலக வாகனங்கள், வெளியூரில் இருந்து இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் போன்றவற்றிற்கு கிருமிநாசினி மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக நகராட்சி தூய்மை பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு தேவையான ஒருமுறை பயன்படுத்தும் முககவசம், N95 முககவசம், துணியினால் ஆன முககவசம், கையுறை, பாதுகாப்பு உடை (PPE), லைசால், 1% சோடியம் ஹைப்போகுளோரைடு, பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், சேனிடைசர் போன்ற பொருட்கள் வாங்கவும், கொரோனா தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரசுரங்கள் அச்சடித்து ஒட்டவும், பிற அவசர கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அரசு கடித எண் 74 JS(MA/நிதி (சம்பளம்)/2020 நாள் 01.04.2020 ன் படி மேற்கண்ட கிருமிநாசினி பொருட்கள் வாங்க ஒப்பந்தம் கோருவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட கிருமிநாசினி பொருட்கள் ஒப்படைப்பு பணியாக செய்யவும், அதற்காகும் தோராய செலவினத்தொகை ரூ.20.00 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொதுசுகாதாரஅவசரஅவசியம் கருதி மேற்கண்ட கிருமிநாசினிகளை ஒப்படைப்பு பணியாக செய்யவும் இச்செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.330/2020/எச்1)

## <u>பொருள் : 04</u>

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு பிரத்யேகமாக அவசர கால தேவைக்கான இருப்பு ஒரு வார காலத்திற்கு கீழ்கண்ட உபகரணங்களை கையிருப்பில் வைக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டலஇயக்குநர், திருப்பூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதன் விபரம் கீழ்கண்டவாறு :

| | | |
|---|---|---|
| 1 | முககவசம் | 7000 எண்ணிக்கைகள் |
| 2 | பாதுகாப்பு கையுறை | 1500 எண்ணிக்கைகள் |
| 3 | PPE Kits | 100 எண்ணிக்கைகள் |
| 4 | பிளீச்சிங் பவுடர் | 1.40 MT |
| 5 | லைசால் | 350 லிட்டர் |
| 6 | ஹைபோகுளோரைடு | 120 லிட்டர் |

மேற்கண்ட உபகரணங்களை M/s Reliant Glopal Green Energy & Co, கோவை அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக கொள்முதல் செய்யவும், அதற்காகும் தோராய செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநில பேரழிவு மறுசீரமைப்பு நிதியில் (SDRF) இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட கிருமிநாசினிகளை ஒப்படைப்பு பணியாக செய்யவும் இச்செலவினத்தை மாநில பேரழிவு மறுசீரமைப்பு நிதியில் (SDRF) இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண் : 330/2020/எச்1)

## பொருள் :05

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுரை நாள் : 16.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் 17.03.2020 ஆணையின்படியும், மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 3546/2020/ஈ4 நாள் : 10.03.2020 மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் தலைமையில் 17.03.2020 அன்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை ஆய்வுக்கூட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்டதின் அடிப்படையிலும், தற்போது தமிழகம் முழுவதும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் தற்போதைய நிலவரப்படி தோராயமாக 45170 மக்கள் தொகை கொண்டுள்ள இந்நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் மற்றும் வெளிக்கொணர்வு அடிப்படையில் 320 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் அனைவரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், அது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவசர அவசியம் கருதி கீழ்கண்ட கிருமிநாசினிகள், பாதுகாப்பு உடைகள், பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவைகளை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் ABLR Garments, பல்லடம், Southern Solid waste Management, Pollachi மற்றும் ஈஸ்வரி ஆப்செட் அச்சகம், பல்லடம் ஆகியோர்களிடம் கொள்முதல் செய்தமைக்கான தொகை ரூ.3,85,986 /- ஐ வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | லைசால் | 200 லி | 84000.00 |
| 2 | சோடியம் ஹைபோ குளோரைடு | 100 லி | 3000.00 |
| 3 | சுண்ணாம்புத்தூள் | 4000 கி | 80000.00 |
| 4 | பிளீச்சிங் பவுடர் | 2000 கி | 108000.00 |
| 5 | பாதுகாப்பு உடைகள் (PPE) | 5 Nos | 12000.00 |
| 6 | N 95 முக கவசம் | 5 Nos | 1250.00 |
| 7 | ஒருமுறை பயன்படுத்தும் முக கவசம் | 500 Nos | 7500.00 |
| 8 | பணியாளர்களுக்கான கையுறை | 200 Nos | 120000.00 |
| 9 | ஒரு முறை பயன்படுத்தும் கையுறை | 500 Nos | 7500.00 |
| 10 | சேனிடைசர், கைகழுவும் சோப்பு திரவம் | – | 20000.00 |
| 11 | துண்டு பிரசுரங்கள், ஸ்டிக்கர், பேனர்கள் | – | 50000.00 |

அலுவலக குறிப்பு

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் ABLR Garments, பல்லடம், Southern Solid waste Management, Pollachi மற்றும் ஈஸ்வரி ஆப்செட் அச்சகம், பல்லடம் ஆகியோருக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்,

## <u>பொருள் : 06</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் ஆகியோரது ஆணையின்படி, கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தமிழகம் முழுவதும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவலை தவிர்க்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவசர அவசியம் கருதி கீழ்கண்ட கிருமிநாசினிகள், பாதுகாப்பு உடைகள், பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவைகளை போதுமான அளவிற்கு இருப்பில் வைத்திருக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் ABLR Garments, பல்லடம், அருணை எண்டர்பிரைசஸ், சென்னை, Southern Solid waste Management, Pollach, சுஜிதா, கோவை மற்றும் பாலாமணி, பல்லடம் ஆகியோர்களிடம் கொள்முதல் செய்தமைக்கான தொகை ரூ. 15,43,313 /- வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஒரு முறை பயன்படுத்தும் முக கவசம் | 7500 எண்ணிக்கை |
| 2 | துணியினால் ஆன முககவசம் | 10000 எண்ணிக்கை |
| 3 | N 95 முககவசம் | 300 எண்ணிக்கை |
| 4 | ஒரு முறை பயன்படுத்தும் கையுறை | 4000 எண்ணிக்கை |
| 5 | பாதுகாப்பு உடை (PPE) (Reusable) | 35 எண்ணிக்கை |
| 6 | ஒரு முறை பயன்படுத்தும் பாதுகாப்பு உடை | 400 எண்ணிக்கை |
| 7 | லைசால் கிருமி நாசினி | 1500 லிட்டர் |
| 8 | பிளிச்சிங் பவுடர் | 2500 லிட்டர் |
| 9 | சுண்ணாம்பு தூள் | 2500 லிட்டர் |
| 10 | சோப் ஆயில் | 150 லிட்டர் |
| 11 | சேனிடைசர் | 25 லிட்டர் |
| 12 | பவர் ஸ்பிரேயர் | 4 எண்ணிக்கை |
| 13 | வாகனத்தில் பொருத்தக்கூடிய ஸ்பேரயர் | 2 எண்ணிக்கை |
| 14 | சோடியம் ஹைபோ குளோரைட் கரைசல் | 1400 லிட்டர் |

அலுவலக குறிப்பு

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் ABLR Garments, பல்லடம், அருணை எண்டர்பிரைசஸ், சென்னை, Southern Solid waste Management, Pollachi, சுஜிதா, கோவை மற்றும் பாலாமணி, பல்லடம் ஆகியோருக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**